## சுருக்கம்

பள்ளிக்கல்வி – கருணை அடிப்படை பணி நியமனம்– சேலம் மாவட்டம், சேனைக்கவுண்டனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான திருமதி.இரா.மஞ்சுளா என்பவரின் வாரிசுதாரரான அவரது மகன் திரு.சீ.எழிலரசன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி வழங்கியது– திரு.சீ.எழிலரசன் என்பவரின் பணியினை 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக்கல்வித்(தொக3(1))துறை

அரசாணை(2டி) எண்.189

நாள் 21.12.2023
திருவள்ளுவர் ஆண்டு–2054
சோபகிருது வருடம், மார்கழி–5

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 26.02.2021.
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 050627/ஜே/இ2/2023, நாள் 12.10.2023.

–*–

**ஆணை:–**

சேலம் மாவட்டம், சேனைக்கவுண்டனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த திருமதி.இரா.மஞ்சுளா என்பவர் பணிக்காலத்தில் 13.09.2015 அன்று காலமானார் என்றும், அவரது வாரிசுதாரரான அவரது மகன் திரு.சீ.எழிலரசன் என்பவர் பார்வை இரண்டில் காணும் அரசாணையின்படி, தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் காரிமங்கலம் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணிநியமனம் செய்யப்பட்டார் என்றும் தெரிவித்து, அன்னாரின் பணியினை நியமன நாள் முதல் வரன்முறை

செய்யுமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களது பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில், சேலம் மாவட்டம், சேனைக்கவுண்டனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 13.09.2015 அன்று மரணமடைந்த திருமதி.இரா.மஞ்சுளா என்பவரின் வாரிசான, அவரது மகன் திரு.சீ.எழிலரசன் என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தருமபுரி மாவட்டம், காரமங்கலம் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும், அவரது பணியினை வரன்முறைப்படுத்திட, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின், அவற்றை விதிகளின்படி பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

**பெறுநர்**
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
(தனியர் பணிப்பதிவேடு மற்றும் ஆவணங்களுடன்)
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)

**நகல்**
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு செயலாளர் அவர்களின் முதன்மைத் தனிச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
பள்ளிக்கல்வித்(அநமு)பிரிவு, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.